**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, NAMAKKAL**

**O.S.No.546/2024**

**04.03.2026**

**P.W.1 – திருமதி. முத்துலட்சுமி**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.**

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் சொத்துக்களை என் அண்ணன் ஏமாற்றி எழுதி வாங்கி கொண்டதால் வழக்கு போட்டுள்ளேன். நான் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அருண்ராஜ் தாவா சொத்தை பொறுத்து வழக்கு போட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 12.04.2011ம் தேதியில் அருண்ராஜ் பெயருக்கு ஏற்பட்ட தானசெட்டில்மெண்ட் ரத்து பத்திரம் செல்லாது என்றும், 30.11.2015ம் தேதியில் எனது பெயருக்கும், எனது சகோதரி பெயருக்கும் எனது தாயார் எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என்று விளம்புகை பரிகாரம் கேட்டு அந்த வழக்கு போட்டிருந்தார். அந்த வழக்கு முழுமையான விசாரணைக்கு பிறகு, அருண்ராஜ்க்கு சாதகமாக தீர்ப்பாகி உள்ளது என்றால் சரிதான். அதன்பிறகு, நான் அந்த தீர்ப்பை எதிர்த்து AS.25/2023 என்ற மேல்முறையீட்டை நாமக்கல் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அதில் விசாரணை நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை உறுதி செய்யபட்டு மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அதை எதிர்த்து நான் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து 2வது மேல்முறையீடு எண்.456/2025 தள்ளுபடி செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். நான் இந்த வழக்கை மேற்படி வழக்கில் செல்லாது என்று உத்தரவு

பிறப்பித்த 30.11.2015ம் தேதிய தான செட்டில்மெண்ட ஆவணத்தின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் அசலை நான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை. என் அம்மா அருண்ராஜ்-க்கு எழுதி கொடுத்த 06.03.2009ம் தேதிய தான செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்து எழுதிய ரத்து பத்திரத்தை படித்து பார்த்திருக்கிறேன். அதில் அருண்ராஜ்க்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்ததை ஒப்பு கொண்டிருக்கிறார் என்று சொன்னால் சரிதான். அந்த ஆவணத்தில் மோசடியாக செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி வாங்கி கொண்டதாக வாசகங்கள் இல்லை. 06.03.2009ம் தேதி என் தாயார் சேலம் ரோட்டில் இருக்கிற சொத்தை பொறுத்து ஒரு செட்டில்மெண்ட் ஆவணமும், தாவா சொத்தை பொறுத்து ஒரு செட்டில்மெண்ட் ஆவணமும் எழுதி வைத்தார். தாவா சொத்துக்கான பத்திர அலுவலகம் நாமக்கல் ஜாயிண்ட்-1 அலுவலகம். சேலம் ரோட்டில் உள்ள சொத்துக்கான பத்திர அலுவலகம் நாமக்கல் ஜாயிண்ட்-2 அலுவலகம் ஆகும். மேற்படி இரண்டு பத்திர அலுவலகங்களும் வெவ்வேறு இடங்களில் இருந்தது. என் தாயார் என்னுடன் சுமார் 10 வருடமாக இருக்கிறார். 2ம் பிரதிவாதி 2016ல் தானசெட்டில்மெண்ட் ரத்து பத்திரம் மற்றும் எங்கள் பெயரில் ஏற்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஆகியவற்றை மோசடியாக எழுதி வாங்கியதாக சொல்லி நாமக்கல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து விசாரணை நடைபெற்றது என்றால் சரிதான். அந்த விசாரணையில் நாங்கள் நீதிமன்றத்தில் போய் பார்த்து கொள்கிறோம் என்று எழுதி கொடுத்து வந்தோம். 1ம் பிரதிவாதி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எங்களுக்கு சட்ட அறிவிப்பு அனுப்பினார்.

அதன்பிறகு, நிலஅபகரிப்பு பிரிவிலும் எங்களுக்கெதிராக மனு கொடுத்தார். அதில் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் அவர் ஓ.எஸ்.50/2014 என்ற வழக்கு நாமக்கல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். தாவா தாக்கல் செய்த காலத்தில் தாவா சொத்து 1 கோடிக்கு மேல் மதிப்பு பெறும் என்று பிராதில் சொல்லியிருக்கிறேன். அதனடிப்படையில் தான்வழக்கை மதிப்பீடு செய்து அதிகப்படியாக நீதிமன்ற கட்டணத்தை செலுத்தும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அதன்படி நீதிமன்ற கட்டணம் செலுத்தப்படாததால் பிராது நிராகரிக்கப்பட்டது என்றால் சரிதான். என் பெயரில் ஏற்பட்ட செல்லாது என்று நான் தாக்கல் செய்த 2வது மேல்முறையீட்டில் தீர்ப்பு ஏற்பட்ட பிறகும், நீதிமன்ற நேரத்தை வீணடிப்பதற்காக இவ்வழக்கை தொடர்ந்து நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. கார்த்திக் எனது மகன். நான் தாக்கல் செய்துள்ள 18.11.2016ம் தேதிய அடமானக்கடன் பத்திரம் பிரதிவாதிகளை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் குடியிருக்கவில்லை. செட்டிபாளையத்தில் குடியிருக்கிறேன். தாவா சொத்தில் தான் பிரதிவாதிகள் தொடர்ந்து குடியிருந்து வருகிறார்கள். நான் மோசடியாக எழுதி வாங்கிய செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் எனது பெயருக்கு தாவா சொத்தை பொறுத்து ஏற்பட்டுள்ள வருவாய் ஆவணங்களான பட்டா, வீட்டுவரி ரசீது ஆகியவை செல்லாது என்றும், பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.20 ஆவணம் 1ம் பிரதிவாதி அருண்ராஜ் பெயருக்கு ஏற்பட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள 2ம் பிரதிவாதி முருகேசன் பெயருக்கு ஏற்பட்டுள்ள 06.03.2009ம் தேதிய வா.சா.ஆ.13

தானசெட்டில்மெண்ட் பத்திரத்திற்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கை வீட்டை பொறுத்து மட்டும் தான் போட்டிருக்கிறோம். வா.சா.ஆ.13 மற்றும் வா.சா.ஆ.20 தான செட்டில்மெண்ட் பத்திரங்கள் என் தாயாரால் முறையே 2 மற்றும் 1 பிரதிவாதிக்கு எழுதி கொடுக்கப்பட்டவை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆதார் அடையாள அட்டை நான் குடியிருக்கும் வீட்டு முகவரிக்கு கொடுக்கப்பட்டுள்ளது. தாவா சொத்தை என் தாயார் 1985ல் கிரையம் வாங்கினார். அந்த கிரைய பத்திரத்தில் குறிப்பிட்ட சர்வே எண் தவறு என்று சொல்லி 17.06.1987ல் ஒரு பிழைத்திருத்தல் பத்திரம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் அந்த பிழைத்திருத்தல் பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை. என் பெயரில் ஏற்பட்ட அசல் தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு காரணம் இல்லை. உரிமையில்லாத என் தாயாரிடமிருந்து எழுதி வாங்கிய தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் இவ்வழக்கை தாக்கல் செய்திருப்பது செல்லாது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி என்ன பதில் தாக்கல் செய்திருக்கிறார் என்பதை படித்து பார்த்து தெரிந்து கொண்டேன். அதற்கு நான் மறுப்புரை தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கை தாக்கல் செய்ய எனக்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றும், எனவே இந்த வழக்கு பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடியாக வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல. உண்மை சங்கதிகளை நீதிமன்றத்திற்கு சொல்லாமல் மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றும், எனவே இவ்வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்து

பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றும் எனவே அவர்களை தாவா சொத்திலிருந்து வெளியேற்ற வேண்டும் என்று கேட்டு கொண்ட பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என் பெயரில் பிறப்பிக்கப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என்று முந்தைய வழக்கில் தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டதால் இவ்வழக்கு முரண்தடைதோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை.

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையெழுத்து இட்டார்.

Sd/- R. Gurumurthy
முதன்மை மாவட்ட நீதிமன்ற நீதிபதி,
நாமக்கல்.